[1998 ஏப்ரல் 2

முற்பகல் *11-30*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கு இரண்டு தீர்மானங்கள் விவாதிக்கப்பட்டன. ஒன்று, குண்டுப்பட்டியில் அத்துமீறி நடந்து கொண்ட காவலர்களைப் பற்றியது. அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று திட்டவட்டமாக, கண்டிப்பாகத் தெரிவிக்கப்பட்ட தீர்மானம். அதுவும் விவாதிக்கப்பட்டது.

அடுத்தது, விருதுநகரிலே சாலை மறியலிலே ஈடுபடுத்தத் தங்களுடைய துணைவியர்களை அனுப்பி வைத்த காவலர்கள் மீது இரக்கம் காட்ட வேண்டுமென்ற மற்றொரு தீர்மானம். இதுதான் ஜனநாயகம். (மேசையைத் தட்டும் ஒலி) இரண்டையும் விவாதிக்கிறோம் அல்லவா? இதற்குப் பெயர்தான் ஜனநாயகம்.

நம்முடைய தாமரைக்கனி அவர்கள் இங்கே பேசும்போது மென்மையாகத்தான் இருக்கும். 'பதட்ட நிலை காவலர்களே போராட ஆரம்பித்து விட்டார்கள்' என்ற இந்த வார்த்தைகள் எல்லாம் பத்திரிகைகளிலே வரும்போது, 'தமிழ்நாட்டிலே காவலர்கள் பதட்டம்' என்று வரும், சில பத்திரிகைகள் இருக்கின்றன; காவலர்கள் வேலை நிறுத்தத்தைத் தூண்டிவிடுகின்ற அளவுக்குக்கூட சில பத்திரிகைகள் இருக்கின்றன.

சமீபகால நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, சில மத்திய அமைச்சர்கள் பேசுகிறார்கள், "இந்த அரசை வீழ்த்த, வீட்டுக்கு அனுப்ப '*356*' தேவையில்லை, அதை நாங்கள் பிரயோகிக்கப் போவதில்லை, வேறு சில முறைகள் இருக்கின்றன இந்த அரசை வீட்டுக்கு அனுப்புவதற்கு" என்று சொல்கிறார்கள். அந்த முறைகளிலே இது ஒன்று போலும். அப்படித்தான் நான் யூகிக்கின்றேன். காவலர்களை விருதுநகரிலே தூண்டிவிட்டவர்கள் யார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். ஓர் அரசியல் கட்சியைச் சார்ந்தவர்கள் அவர்கள். அந்த அரசியல் கட்சி இந்த மாமன்றத்தில் இடம் பெறவில்லை. அது எது என்பது திரு. தாமரைக்கனி அவர்களுக்குத் தெரிந்திருக்கக்கூடும். தெரிந்திருக்காவிட்டால், தனியாகக் கேட்டால், அவர்களிடத்தில் சொல்வதற்கும் நான் தயாராக இருக்கிறேன். ஓர் அரசியல் கட்சி, காவலர்களுடைய இத்தகைய போராட்டத்தை விருதுநகரிலே மறைமுகமாக இருந்து தூண்டிவிட்டு, அவர்களுடைய அந்தப் போராட்டம் மாநிலத்தின் பல பகுதிகளிலேயும் பெருகி, அதன்

காரணமாக அரசுக்கு ஒரு நெருக்கடியை ஏற்படுத்தலாம் என்று யாராவது கருதுவார்களேயானால், போலீசார் என்ற அளவிலே இருந்த போராட்டம் என்று இருக்காமல், கடைசியிலே 'யானையே தன் தலையில் மண்ணை வாரிப் போட்டுக் கொண்டதுபோல' போலீஸ் துறையிலே இருந்து ஆரம்பிக்கின்ற போராட்டம் கடைசியிலே இராணுவம் வரை போனால் என்ன ஆகும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. இராணுவமானாலும், போலீஸ் துறையானாலும், அவர்களுக்கு என்று ஒரு கட்டுப்பாடு இருக்கிறது.

இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சிலர் பேசும்போது, அதிலும் குறிப்பாக நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன், பட்டாளி மக்கள் கட்சியின் சட்டமன்ற தலைவர் பேசும்போது, சாலை மறியல் செய்தார்கள் காவலர்களுடைய மனைவிமார்கள்; கற்களைப் போட்டு சாலையைத் தடுத்தார்கள்; பேருந்துகளுடைய கண்ணாடிகளை எல்லாம் உடைத்தார்கள் என்றெல்லாம் சொன்னார். யார்? காவலர்கள் வீட்டுப் பெண்மணிகள் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். சாலையிலே கற்களைப் போட்டுத் தடுத்தால், பேருந்துகளின் கண்ணாடிகளை உடைத்தால், அப்படிச் செய்கின்ற சமூக விரோதிகளைப் பிடித்துக் கைது செய்து வழக்குப் போடவேண்டிய காவலர்களுடைய குடும்பத்தினரே பஸ்கள் மீது கற்களை வீசினார்கள்; சாலையின் குறுக்கே கற்களைப் போட்டுத் தடுத்தார்கள் என்ற நிலைமை வருமானால், இதையும் ஓர் அரசு பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டுமென்று சொன்னால், அவ்வளவு கோழைத்தனமாக இந்த அரசை நடத்த நான் விரும்பவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) எத்தனை நாளைக்கு நான் ஆளுகிறேன் என்பதல்ல, எப்படி ஆட்சி நடத்தினேன் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) எனக்கு முக்கியம் என்பதை ஒரு சுயமரியாதைக்காரன் என்ற முறையிலே, இந்த அவையிலே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

திரு. தாமரைக்கனி, திரு. நிஜாமுதீன், திரு. கணேசன், திரு. பெரியசாமி, திரு. சந்தானம் ஆகியோர் எடுத்துரைத்த இந்தக் கருத்துக்கள் மிக ஆழமானவை; சிந்திக்கத்தக்கவை. பத்து கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற அதே ஊதியத்தை மாநில அரசினுடைய ஊழியர்களுக்கும் தருவேன் என்று ஏற்கெனவே நான் அறிவித்து, அதற்கென்று பல அரசு அலுவலர்களுடைய அமைப்புகளோடு இரண்டு, மூன்று நாட்கள், பல மணி நேரம் கலந்து பேசி, அவர்களும் திருப்தி அடைகின்ற அளவுக்கு, மறுப்புச் சொல்லாத அளவுக்கு,

ஏற்றுக்கொள்ளுகின்ற அளவுக்கு, அவர்கள் கேட்ட தேதியின்படி அவர்கள் கேட்ட சலுகைகளை எல்லாம் அறிவித்து, முரண்பாடுகள் இருந்தால் அவற்றை மூன்று மாத காலத்திற்குள்ளாகத் தீர்த்து வைக்க, ஒரு நபர் கமிஷன் ஒன்றும் நியமிக்கப்படும் என்று இதே அவையில் நிதிநிலை அறிக்கையிலே அறிவித்தபிறகும், அதிலே ஒரு போராட்டம் நடத்துகிற அளவுக்கு என்ன பிரச்சினை வந்தது என்பதைத் தயவுசெய்து சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

முற்பகல் 11-35

தற்போதுள்ள 25 ஊதிய விகிதங்களுக்கு இணையாக மத்திய அரசின் திருத்திய ஊதிய விகிதங்கள் வழங்கப்படும் என்றும், மத்திய அரசால் வழங்கப்பட்ட 40 விழுக்காடு ஊதிய நிர்ணயப் பயன் மாநில அரசின் முழுநேர அலுவலர்கள், பகுதிநேர அலுவலர்கள் - சத்துணவுத் திட்டம் போன்றவற்றில் பணியாற்றுகிற - பகுதிநேர அலுவலர்கள் அனைவருக்கும் வழங்கப்படும் என்றும் பொதுவாகத்தான் நான் அறிவித்திருக்கிறேனே அல்லாமல், ஒவ்வொருவருக்கும் இன்னின்ன ஊதிய உயர்வு என்று குறிப்பிட்டு அறிவிக்கப்படவில்லை. இதிலே காவலர்கள் யாரும் விடுபட்டுப் போய்விடவில்லை. அவர்களும் அரசு ஊழியர்கள் என்ற பட்டியலில்தான் சேர்கிறார்கள். அதுமாத்திரம் அல்ல, அவர்களுக்கு ரிஸ்க் அலவன்ஸ் என்ற ஒன்று உண்டு. அவர்கள் பணியாற்றுகின்ற நேரத்தில் வருகின்ற இடையூறுகளையும் கடந்து, அதைப்பற்றிக் கவலைப்படாமல் பணியாற்றுவதற்காகத் தரப்படுகின்ற இந்த ரிஸ்க் அலவன்ஸ் என்பதைக்கூட காவல் துறை மானியம் வரும்போது விவாதித்து, காவல் துறை உயர் அதிகாரிகளோடும், காவல் துறையினுடைய ஹோம் செக்ரடரி உள்-துறைச் செயலாளரோடும், தலைமைச் செயலாளரோடும் கலந்துபேசி, உயர்த்தித் தர வேண்டும் என்கின்ற ஓர் எண்ணத்தோடு இந்த அரசு இருக்கின்ற இந்த நேரத்தில், சில கோரிக்கைகளை வைத்து, உடனடியாக நிறைவேற்றிக் கொடுக்க வேண்டும், இல்லாவிட்டால் சாலை மறியல் என்று சொன்னால், இதை எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்?

சாலை மறியல் நல்ல காரியங்களுக்காக நடைபெறும்போது அதை நாம் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், சாலை மறியலே, தொடர்ந்து நடைபெறக்கூடிய ஒரு நடவடிக்கை என்று ஆகிவிடுமேயானால் அதை அரசு பொறுத்துக்கொண்டு இருக்க முடியாது. சாலை மறியல் யார் நடத்தினாலும் இனிமேல் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்து, நம்முடைய எதிர்க்கட்சியிலே அமர்ந்திருக்கின்ற தலைவர்கள்,

அவர்கள் இந்த ஆட்சிக்குத் தோழமையாக உள்ளவர்களாக இருந்தாலும் சரி அல்லது ஜனநாயக முறையில் எதிர்க்கட்சியாகச் செயல்பட்டாலும் சரி, அனைவருமே சிந்தித்து இதுபோன்ற சாலை மறியல்களால் நடக்கப்போவது என்ன, உட்கார்ந்து, கலந்து பேசி ஏன் பல பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளக்கூடாது என்ற அறிவுரையை அவர்களுக்கெல்லாம் வழங்க வேண்டுமென்றும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலே காவலர்களுடைய துறைக்காக நடைபெறுகின்ற மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது, அவர்களுக்கு எந்த, எந்த வகையிலே இந்த ஊதிய விகிதாச்சாரம் பகிர்ந்தளிக்கப்படுகிறது, அவர்கள் அலட்சியப்படுத்தப் படவில்லை என்ற அந்த உண்மை நிலவரத்தை எல்லாம் இந்த அவைக்குத் தெரிவிப்பேன் என்று கூறி, இந்த அளவிலே அமைகின்றேன்.

3. அறிவிப்பு

மேதகு ஆளுநர் அவர்கள் 18-3-1998 அன்று அவையில் ஆற்றிய உரைக்கு உறுப்பினர்கள் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் பெறப்பட்டது குறித்த ஆளுநரின் செய்தி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து *29-3-1998* ஆம் நாளிட்ட கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்:

"I have received with pleasure the resolution adopted by the Assembly on 23rd March, 1998 thanking me for my address delivered on 18th March 1998 to the Members of the Tamil Nadu Legislative Assembly."

4. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, 1998

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்). 1998ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் (திருத்த) சட்டமுன்வடிவு, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*